**தலைப்பு 269 - மட்டக்களப்பு மாவட்டச் செயலகம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2019 மே 22 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2019 மே 28 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மட்டக்களப்பு மாவட்டச் செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் வெளிப்படை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்டச் செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தர் தெரியப்படுத்தியிருந்தார்.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---------------------------------------------------------------------

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்கள் நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது.

(ஆ) மாவட்ட செயலகத்தின் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-----------------------------------------------

**1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை**

-------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்குகள் திணைக்களத்தின் 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 07(iv) மற்றும் (v) ஆம் பிரிவின் பிரகாரம், மொத்த சொத்துகளுக்கு சமனாக மொத்த பொறுப்புகள் நிதி நிலைமைக் கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், மாவட்டச் செயலகத்தின் சொத்துக்கள் ரூபா 2,270,569,959 மொத்த தொகையாகவும் பொறுப்புக்கள் ரூபா | அரச கணக்குகள் திணைக்களத்தின் சுற்றறிக்கையின் பிரகாரம் சொத்துக்களுக்கு சமனாக பொறுப்புக்கள் நிதிக்கூற்றில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | மாவட்டச் செயலகத்தின் மொத்த சொத்துக்களின் கூட்டு மொத்த தொகைக்குச் சமனாக மொத்தப் பொறுப்புக்கள் நிதிக்கூற்றில் வெளிக் காட்டப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | 110,081,007 மொத்த தொகையாகவும் காணப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | அரச கணக்குகள் சுற்றறிக்கையின் 7 (ii) ஆம் பிரிவின் பிரகாரம், ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு உரித்தான வருமானங்கள் முழுவதையும் வருமானக்கூற்றின் படிவம் ஏசிஏ - 01 இன் கீழ் உள்ளடக்கப்படலாகாது என குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் சுற்றறிக்கைக்கு முரணாக ரூபா 141,555,915 தொகை உள்ளடக்கப்பட்டிருந்தன. | ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களுக்கு உரித்தான வருமானங்களை வருமானக்கூற்று படிவம் ஏசிஏ - 01 இன் கீழ் உள்ளடக்கப்படலாகாது. | வழமையாக நாம் வருமான தலைப்பின் கீழான வருமானங்களை ஒதுக்கீட்டு கணக்கில் வருமானமாக காட்டிய தாலேயே இவ் வருடத் திற்கான நிதிக் கூற்றிலும் ரூபா 141,555,915 தொகையை வருமானக் கூற்றில் உள்ளடக்கியிருந்தோம். |

## 1.6.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

-----------------------------------

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரி அச்சுப்பிரதியின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நடைமுறையல்லாச் சொத்துக்களின் மொத்தப் பெறுமதி ரூபா 1,748,314,898 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும், மாவட்டச் செயலகத்தின் நிதிக்கூற்றுக்களில் அப்பெறுமதி ரூபா 2,145,173,771 ஆகக் காட்டப்பட்டதனால் நடைமுறையல்லாச் சொத்துக்கள் ரூபா 396,858,873 தொகையினால் அதிகரித்துக் | திறைசேரி அச்சுப்பிரதியில் குறிப்பிடப்பட்ட சொத்துக்களின் பெறுமதிக்குச் சமனாக மாவட்டச் செயலகத்தின் சொத்துக்களின் பெறுமதி இணங்கியிருத்தல் வேண்டும். | இவ்வேறுபாடு தொடர்பாக பொதுத்திறைசேரி அரச கணக்குகள் திணைக்களத்திற்கு எழுத்து மூலம் ACC/ASTRR/CU-04/2019-01 ஆம் இலக்க 2019 பெப்ரவரி 05 ஆந் திகதிய கடிதம் மூலமாகவும் அரச கணக்குகள் திணைக்களத்தின் SA/AS/DD/General ஆம் இலக்க 2019 மார்ச் 21 ஆந் திகதிய கடிதத்திற்கமைவாக ACC/ASTRR/CU-04/2019-01 ஆம் இலக்க 2019 மார்ச் 25 ஆந் |

| | | | |
|---|---|---|---|
| | காட்டப்பட்டிருந்தது. | | திகதிய கடிதம் மூலமாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மீளாய்வாண்டில் பணமாக மேற்கொள்ளப்பட்ட வைப்புக் கொடுப்பனவுகள் ரூபா 532,518,047 மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் ரூபா 43,940,552 என்பன காசுப்பாய்ச்சல் கூற்றில் தொழிற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாக காட்டப்பட்டிருக்கவில்லை. | பணமாக கொடுப்பனவு செய்யப்பட்டவைகள் சரியாக இனங்காணப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காட்டப்படல் வேண்டும். | வைப்பு மற்றும் முற்பணக் கொடுப்பனவுகள் என ஏசீஏ-எப் (ACA-F) படிவத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததால் இவ் வருடத்திற்கான வைப்பு மற்றும் முற்பணக் கொடுப்பனவுகளை அதில் குறிப்பிட்டிருந்தோம். ஆனால் அத்தொகை தவறுதலாக தொழிற்பாட்டு செயற்பாடு களிலிருந்தான காசு வெளிப்பாய்ச்சலாக வெளிக் காட்டப்படாமல் இருந்தது. |

**1.6.3 அறவிட வேண்டிய கடன் நிலுவையை அறவிடாமை**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 212,630 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 02 வருடம் முதல் 03 வருடங்கள் வரையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த நிலுவை மீதிகளை அறவிடும் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது. | கடனை திருப்பிச் செலுத்தாத உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மரண பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மரண பணிக்கொடை கிடைக்கப்பெற்றதும் தீர்வை செய்யப்படும். 2017 ஜூன் 23 ஆந் திகதி உத்தியோகத்தரின் கடன் நிலுவை அறவீடு தொடர்பாக உத்தியோகத்தரிற்கு எதிராக வழக்கினை தாக்கல் செய்வதற்காக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

## 2. நிதி முகாமைத்துவம்

---------------------------

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திட்டமிடப்பட்டவாறு உரிய காலப்பகுதியில் குறித்த பணிகளை நிறைவேற்றாது, அப்பணிகளை ஆண்டின் இறுதியில் செய்ய முனைவதால் தேவையான கட்டுநிதிகள் திறை சேரியினால் வழங்கப்படவில்லை எனக் குறிப்பிடப்பட்டு ஆண்டின் இறுதியில் வேலைகள் நிறைவேற்றப்படாத பல சந்தர்ப்பங்கள் காணப்பட்டன. இதற்கிணங்க மீளாய்வாண்டின் போது ரூபா 424,676,441 கூட்டு மொத்தப் பெறுமதியான 233 பணிகள் நிறைவேற்ற முடியாதிருந்தது. | திட்டமிடப்பட்டவாறு கட்டுநிதியினைப் பெற்று அப்பணிகளை குறிப்பிட்ட காலத்தினுள் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | வரிசை அமைச்சுக்கள் ஒதுக்கீட்டினை வருட இறுதியில் வழங்கும் போது காலநிலையில் சீரற்ற நிலை ஏற்படுவதால் பணிகளை குறித்த காலப்பகுதியில் நிறைவேற்ற முடியாத நிலை ஏற்படுவதுடன் கட்டுநிதி பெறுவதிலும் சிரமங்கள் ஏற்படுகின்றன. |

### 2.2 வருமான முகாமைத்துவம்

---------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் ஏனைய பெறுகைகளுக்கான வருமான மதிப்பீடு ரூபா 4,750,000 ஆக இருந்த போதிலும் உள்ளபடியாக சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 18,281,047 தொகையாக இருந்தமையால் வருமான மதிப்பீடு நடைமுறைக்குச் சாத்தியமற்ற வகையில் தயாரிக்கப்பட்டதாக வெளிப்படுத்துகின்றது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளுக்கு அமைய வருமான மதிப்பீடு நடைமுறைக்குச் சாத்தியமான வகையில் தயாரிக்கப்படுதல் வேண்டும். | ஏலவிற்பனை வருமானம், மாற்றப்படாத காசோலைகள் மற்றும் நிதிப்பிரமாணம் 571 இன் படி அரச வருவாயில் சேர்த்துக் கொள்வதனால் உண்மை வருமானம் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை விட அதிகரித்துக் காணப்படுகின்றது. |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 03 மீண்டுவரும் செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 6,525,000 மொத்த தேறிய நிதி ஏற்பாட்டில் ரூபா 2,484,850 தொகை நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் வேறு செலவின விடயங்களிற்காக மாற்றப் பட்டிருந்தன. இது ஏற்பாட்டின் 36 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சினைக் கொண்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம், மதிப்பீடுகளை இயன்றவரையில் பூரணமாகவும் சரியாகவும் தயாரிப்பதற்கு கணக்கீட்டு உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | செலவுகளை எதிர்பார்த்து தயாரிக்கப்பட்ட பாதீட்டினை குறித்த வருடத்தில் மேற்கொள்ளும் போது எதிர்பாராதவிதமாக ஏற்படும் விலைமாற்றம், காலநிலை மாற்றம் போன்ற காரணத்தினால் சேமிப்பு மற்றும் மேலதிக செலவுகள் ஏற்படுகின்றன. இதனால் வகை மாற்றம் செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளன. |

# 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள நீச்சல் வீர வீராங்கனைகளுக்கு நீச்சல் பயிற்சி வழங்கி அவர்களின் திறமைகளை வெளிக்கொணரும் நோக்கில் விளையாட்டுத்துறை அமைச்சினால் 2017 ஆம் ஆண்டில் ரூபா 197.47 மில்லியன் கிரயத்தில் நிர்மாணிக்கப்பட்டு மட்டக்களப்பு மாநகரசபைக்கு ஒப்படைக்கப்பட்ட நீச்சல் தடாகமானது மாவட்டத்திலுள்ள வீர வீராங்கனைகளுக்கு நீச்சல் பயிற்சி பெற்றுக்கொள்வதற்கு | இது நிர்மாணிக்கப்பட்ட குறிக்கோளை அடைந்து கொள்ளும் வகையில் நீச்சல் தடாகம் பயன்படுத்தப்படுதல் வேண்டும். | இத்தடாகமானது மட்டக்களப்பு மாநகர சபைக்கு கையளிக்கப் பட்டிருந்ததுடன் இதனை சுத்தமானதாகவும் சுகாதாரமானதாகவும் பராமரிப்பதற்கு மாநகர சபைக்கு மாதாந்தம் ரூபா 76,220 செலவு ஏற்படுகின்றமையினால் இச்செலவினை ஈடுசெய்வதற்காக பகுதிநேர வேளைகளில் வருமானம் |

| | | |
|---|---|---|
| சந்தர்ப்பம் வழங்கப்படாமல் வருமானம் ஈட்டும் நோக்கில் தனியார் நீச்சல் பயிற்சி நிறுவனம் ஒன்றிற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது. இதனால் இச்செயற்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள்கள் அடைந்து கொள்ளப்படவில்லை. | | உழைப்பதற்காக இத்தடாகம் வழங்கப்படுகின்றது. |

## 3.2 கடப்பாடுகளும் பொறுப்புக்களும்

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்பட்டது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மாவட்டச் செயலகத்திற்குச் சொந்தமான கட்டிடத்திற்காக மட்டக்களப்பு மாநகர சபைக்கு 2006 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை செலுத்த வேண்டிய ரூபா 190,668 தொகையான ஆதன வரி 2019 மே 15 வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய ஆதன வரியை உரிய காலத்தில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. |

## 3.3 முகாமைத்துவ பலவீனங்கள்

பின்வரும் முகாமைத்துவ பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சுனாமியால் பாதிக்கப்பட்டோரை மீளக் குடியமர்த்துவதற்காக காணிகளை கையேற்று அக்காணிகளுக்கு இழப்பீடு செலுத்தும் நடவடிக்கைகள் மண்முனை வடக்கு பிரதேச செயலகத்தினால் 2017 ஆம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்டிருந்த | உத்தியோகத்தர்கள் கவனயீனமாக செயற்பட்டதற்காகவும், கடமையினை அலட்சியம் செய்ததற்காகவும், அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்படுத்தியதற்காகவும் நிதிப்பிரமாணத்தின் படி ஒழுக்காற்று நடவடிக்கைகள் | காணி சுவீகரிப்பில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக பொருத்தமான நடவடிக்கை எடுப்பதற்காக செயலாளர், உள்ளக, உள்நாட்டலுவல்கள் மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி |

| | | | |
|---|---|---|---|
| | போதிலும், அதன் பின்னர், மூன்று நபர்களால் போலி ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டு ரூபா 6.3 மில்லியன் இழப்பீடு பெறப்பட்டிருந்தது. இருப்பினும், குறித்த பிரதேச செயலகத்திலுள்ள பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களால் குறித்த ஆவணங்களின் சரியானதன்மை தொடர்பில் கவனம் செலுத்தாது இந்த இழப்பீடு செலுத்தப்படுவதற்கு பரிந்துரை செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக எந்தவொரு ஒழுக்காற்று நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. | எடுக்கப்படல் வேண்டும். | அமைச்சிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் முறையற்ற விதத்தில் நட்டஈடு பெற்ற நபர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு மண்முனை வடக்கு பிரதேச செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மட்டக்களப்பு மாவட்ட சமுர்த்தி அலுவலகத்தில் காசோலை மூலம் கொடுப்பனவு செய்தல், ஏடுகளைப் பராமரித்தல் தொடர்பாக போதியளவு உள்ளகக் கட்டுப்பாடுகளை நிறைவேற்றுவதற்கு முகாமைத்துவம் தவறியதன் காரணமாக அந்த அலுவலகத்தில் கடமையாற்றிய அலுவலகர் ஒருவரினால் ரூபா 5,700,000 பெறுமதியான காசோலைக்கு மோசடியாக பணத்தை பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாண ஏற்பாடுகளிற்கமைய காசோலை பயன்பாட்டு முறைமைகள் தொடர்பான சிறந்த உள்ளகக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நாளாந்தம் காசோலை கள் உரிய உத்தியோகத் தர்களால் சரி பார்த்து உறுதிப்படுத்தப் பட்டிருக்கவில்லை. எனினும் தற்போது சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர் ஒழுக்காற்று விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தற்போது இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். எதிர்காலத்தில் இத் தவறுகள் இடம் பெறாதிருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (இ) | நிதிப்பிரமாணம் 177 இன் பிரகாரம், அரசாங்கத்தின் சார்பில் பெற்றுக்கொள்ளும் பணம் முழுவதையும் நாள் தோறும் அல்லது முடியுமான அளவு விரைவாக வங்கியில் வைப்பு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் ஏறாவூர் நகர் பிரதேச செயலகத்தினால் 08 | நிதிப்பிரமாணம் 177 இன் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | இவ்விடயம் தொடர்பாக ஆராய்வதற்காக தனிநபர் விசாரணை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. அவ்விசாரணை முடிவு கிடைக்கப்பெற்றதும் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

சந்தர்ப்பங்களில் ரூபா 474,514 தொகை 03 தொடக்கம் 04 வரையான நாட்கள் தாமதித்து வைப்பிலிடப்பட்டிருந்தது.

**4. மனிதவள முகாமைத்துவம்**

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பரிந்துரை** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** |
|---|---|---|
| வெற்றிடமாக காணப்படும் 10 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்கள் ஆட்சேர்க்கப்படாமையினால் பிரதேச செயலகங்களில் நிர்வாக நடவடிக்கைகள் பலவீனமான நிலையில் காணப்படுகின்றன. | வெற்றிடமாக காணப்படும் 10 நிர்வாக உத்தியோகத்தர் பதவிகளுக்கு நிரந்தர உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | நிர்வாக உத்தியோகத்தர் நியமன வெற்றிடங்கள் மீள் நிரப்புதல் தொடர்பாக உள் நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளன. |